1990 ஏப்ரல் 18]

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக அவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் 18.29 லட்சம் ரூபாய். இந்த ஆண்டு வரை கணக்கிடப்பட்ட வட்டி 16.73 லட்சம் ரூபாய். ஆக மொத்தம் 35.02 லட்சம். நிலுவையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த ஆலோசனையின் அடிப்படையில் தான் அரசு இன்றைக்கு இதைப்பற்றி பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

*864 திரு. வி.கே. சின்னசாமி:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டம், பவானிசாகர் தொகுதிக்கு உட்பட்ட காசிப்பாளையம் பேரூராட்சி மற்றும் அக்கறைக்கொடிவேரி ஊராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் எப்பொழுது துவங்கப்படும்

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி ? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இத்திட்டப்பணிகள் துவங்கப்பட்டு விட்டன.

10—00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் ''வினா நேரம்'' சற்று நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்தக் கேள்விக் கேட்டு ரொம்ப நாளாகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஈரோட்டுக்கு வந்த நேரத்தில் தான் இந்தத் திட்டத்திற்காக அடிக்கல் நாட்டுவிழா செய்தார்கள் என்று கருதுகிறேன். ஆகவே இந்த திட்டத்தால் பயன் பெறுகின்ற மக்கள் தொகை எவ்வளவு? இந்தத் திட்டம் எப்போது முழுமை பெறும்? அப்படி நிறைவேற்றப்பட்டால் எப்போது அந்தப் பகுதியில் உள்ள மக்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் பெறுவார்கள்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டு குடிநீர்த் திட்டத்தினால், காசிப்பாளையம் பேரூராட்சி, அக்கறைக்குடிலேறு மற்றும் மச்சினங்கோம்பை போன்ற ஊராட்சிகள் பயன்பெறும். இந்தத் திட்டம் 1989 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் துவக்கப்பட்டது. இத்திட்டம் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் முடியும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் கவனிக்க வேண்டும். இது கூட்டுக் குடிநீர்த் திட்டம். கூட்டுக் கேள்வித் திட்டம் அல்ல. (சிரிப்பு)

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை நிறை வேற்றும் போது அவைகள் முழுமையாக நிறைவேற்றப்படும்போது ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்களில் அதை ஒப்படைக்கிறார்கள். இரண்டு மூன்று ஊராட்சிகளை அதில் இணைத்தால், பராமரிப்பதில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆகவே முறையான தண்ணீர் சப்ளை கொடுக்கமுடியவில்லை, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்போது அதை ஆய்வு நடத்திக்கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே முதல்வர் அவர்களோடு கலந்து, அப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றும்போது, அதைப் பராமரிக்கிற பொறுப்புகளை குடிநீர் வடிகால் வாரியமே ஆற்றவேண்டும். அப்படி பராமரிக்கச் செய்ய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா? அதோடு மேலும் என்னுடைய தொகுதியில் இப்படி குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்படுகிற வாய்ப்புகள் உள்ளனவா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சருடன் சேர்ந்துபேசி இதுபற்றி முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செயற்கை மழை

*3683 டாக்டர் எஸ். சுந்தரராஜ்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இ ராமநாதபுரம் மாவட்டத்தில் செயற்கை மழை பெய்விக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

டாக்டர். எஸ். சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, ராமநாதபுரம் மாவட்டம் மிகவும் வறட்சி மாவட்டம். நிரந்தரமாக வறட்சி மாவட்டமாகத்தான் எப்போதும் காட்சியளிக்கிறது. ராமநாதபுரம் மாவட்டத்தில் குடிக்கக்கூட தண்ணீர் இல்லாமல் மக்கள் அலையும் சூழ்நிலையில் தான் இருக்கிறார்கள். மற்ற